தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௯ சௌமிய, வைகாசி	மலர்
சங	1969–மே-ஜூன்	உ

பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

24–5–69இல் சங்கத் தமிழ்ப்பெருமன்றத்தில் பேராசிரியர் அ. கிருட்டினமூர்த்தி அவர்கள் தலைமையில் ஓர் இலக்கியச் சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. திருமதி. சாலினி இளந்திரையன் (பேராசிரியர், திருவேங்கடவன் கல்லூரி, தில்லி) அவர்கள் "தென்னவன் தீதிலன்" என்ற பொருள் பற்றியும் திரு. சாலை. இளந்திரையன் (பேராசிரியர், தில்லி பல்கலைக் கழகம்) அவர்கள் "தமிழ் வளர்ச்சிக்கு ஒரு திட்டம்" என்பது பற்றியும் சிறப்புரையாற்றினார்கள். அச் சிறப்புரைகளின் சுருக்கம்:—

தென்னவன் தீதிலன்:- ஒரு காப்பியத்தை ஆராயும் போது அதன் அமைப்பு, ஒழுங்கு முறை இவற்றை முதற்கண் நோக்கவேண்டும். தென்னவன் தீதிலன் என்ற சொற்கள் கண்ணகியாலேயே உரைக்கப்பெற்றனவாகும். இதன் கருத்தினை காப்பியத்திலுள்ள பல்வேறு கதாபாத்திரங்களின் அபிப்பிராயங்கள் வழி உறுதி செய்யப்பெறுகின்றன. கோவலன் பாண்டிய நாட்டை சிறந்த அரசுடை நாடு, நல்லநாடு என்று கூறுகிறான். மதுரை மக்கள் எல்லோரும் இவ்வாறான தவறு பாண்டிய நாட்டிலா நடந்தது என்று மயங்கினார்கள். சேரன் செங்குட்டுவன் மற்றொரு மன்னனுக்கு ஏற்பட்ட இழுக்கைக் கேட்டு வருந்துகிறான், எனினும் அவன் செங்கோல் வளைந்த செய்தி எட்டுமுன்னரே தன் உயிரைவிட்டு பாண்டியன் அச் செங்கோலை நிமிர்த்தினான் என்று பாராட்டுகிறான். மதுரைமா தெய்வமும் பாண்டியன் தவறில்லாதவன் என்று கண்ணகிக்கு உணர்த்துகிறது. இங்ஙனம் கதாபாத்திரங்கள் மூலமாக தென்னவன் தீதிலனென்பது உணர்த்தப்பெறுகின்றது.

பாண்டியன் "கொன்று, சிலம்பு கொணர்க" என்று சொல்லி தானே நேரில் விசாரிக்காதது குறையாகத் தோன்று கிறது. ஆழ்ந்து நோக்குங்கால் அவன்பாற் தீதில்லையென் பது விளங்கும் ஒரு மன்னன் சில செயல்களை தக்க பணி யாளர்கள் மூலம் செயல்படுத்துவது முறையே. சிலம்பைக் கொணரும் பணியை நல்ல தேர்ச்சிபெற்ற ஊர்க்காப்பாளர் களிடம் பாண்டியன் ஒப்படைக்கிறான். "அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர்; செறிந்த நூல்வழிப் பிழையா நுணங்கு நுண் தேர்ச்சி ஊர்க்காப்பாளர்கள்" என்றுகுறிப்பிடப்பெறுகிறார்கள். பூங்கோதை சிலம்பாயிருத்தல் வேண்டும், கன்றிய கள்வனு யிருத்தல் வேண்டும் என்ற இரண்டு நிபந்தனைகளை அவர் களுக்கு உரைக்கிறான். ஊர்க்காவலர்களும் கோவலன் கள்வ னல்ல என்ற முடிவுக்கு வருகிறார்கள். சிலம்பின் வர்ணனையில் பொற்கொல்லனின் கூற்றினை அவர்கள் ஏற்கவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். அச்சூழ்நிலையில் கோவலனைக் கொன்றது "கல்லாக் களிமகன்" (பழகுநிலையில் முழுப்பயிற்சி பெறாத) ஒருவனே கோவலனைக் கொன்றானென்பதையும் கவனித்தல் வேண்டும். பாண்டியன் ஏற்ற திறமையாளர் களிடந்தான் தன் கடமையை ஒப்படைத்தான். அவன் முறை யற்ற வழியில் நடக்கவில்லை எனவே அவன் தீதிலன் என் பது தெளிவாக்கப்பெறுகிறது

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு திட்டம் :- சங்ககால இலக்கியம் வீரம், காதல் இவைகளைப்பற்றியே பெரிதும் கூறிற்று. பொரு ளாதாரம், மற்ற வாழ்க்கையில் நிகழும் உணர்ச்சிகளையும் செயல்களையும் கையாளவில்லை இடைக்காலத்திலுள்ள இலக் கியம் காதல் உணர்ச்சிகளை விடுத்து பக்தியாகப் பொழிந்தது. "குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும்" என்று கூறும் போது இணையற்ற இலக்கியச் சுவை ததும்புகிறது. சங்க காலத்தில் இவ்வாறான வர்ணனைகள் காணப்படவில்லை. சங்க காலத்தில் சம்பிரதாயப்பட்ட சமூகம் அமையவில்லை. இனி தமிழ்மொழி வளர்ச்சிக்கு சங்ககால இலக்கியம், இடைக்கால இலக்கியம், சமய இலக்கியம், தற்கால இலக்கியம் எனச் சிறிது சிறிதாகப் பிரித்து ஆராய்ச்சிகள் செய்யவேண்டும். தமிழில் எம். ஏ. பயில்வோர் ஒரு பிரிவை ஆழ்ந்து ஆராய்ந்து சிறப்பாகவும் மற்ற பிரிவுகளைப் பொதுவாகவும் பயில வேண்டும்.

செயப்பாட்டு வினை

திரு. S. அகத்தியலிங்கம், M. A., Ph. D. (கேரளா),
Ph. D. (இந்தியானா).
மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

வினைச் சொற்களில் காணப்படும் இலக்கணக் கூறுகளில் செய்வினை [active voice] என்பதும் ஒன்று; இது போன்றே செயப்பாட்டு வினையும் [passive voice] ஒன்று. உலக மொழிகள் பலவற்றின் வினைச் சொற்களில் இவ்விரு இலக்கணக் கூறுகளையும் காண முடியும். எனினும் திராவிட மொழிகளில், குறிப்பாக தமிழ் மொழியில் செயப்பாட்டு வினை உள்ளதா? என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு இருக்கக் காணலாம்

திராவிட மொழிகள் பற்றி நன்கு ஆராய்ந்து அவற்றை உலகுக்குணர்த்திய அறிஞர் கால்டுவெல் இது பற்றி நன்கு ஆராய்ந்துள்ளார். பலவேறு திராவிட மொழிகளின் பண்பினை ஆராய்ந்த கால்டுவெல் "திராவிட வினைச் சொற்கள் செயப்பாட்டு வினையை உணர்த்துவதில்லை" என முடிவு செய்துள்ளார். "இன்றைய திராவிட மொழிகளில் செயப்பாட்டுவினை பயன்படுவதில்லை" என்றும் "முற்காலத்திலும் இம்மொழிகள் இவ்விலக்கணக் கூறைக் கொண்டிருந்தது என எண்ண முடியாது" என்றும் திட்ட வட்டமாகக் கூறியுள்ளார்.[1] இதே கருத்தினை இன்னும் பலரும் கொண்டுள்ளனர்.[2]

எனினும் இம்முடிவு எல்லோராலும் ஒத்துக்கொள்ளப் படுவதில்லை. காலம் சென்ற பேராசிரியர் சிதம்பரநாதனர்

---

1. The Dravidian verb is entirely destitute of a passive voice, properly so called, nor is there any reason to suppose that it ever had a passive. None of the Dravidian dialects possesses any passive particle or suffix. or any means of expressing passivity by direct inflextional changes; the signification of the passive voice is nevertheless, capable of being expressed in a variety of ways.

   Caldwell, 1961, p. 463

2. Arden, 1955, p. 101; 1954, p. 234
   Hodson, 1864, p. 39; Cole, 1867, p. 43.

கால்டுவெல் கொள்கை தவறு எனத் தாம் எழுதிய கட்டுரை யொன்றில் குறிப்பிடுகிருர்.[1] தமிழில் "படு" எனும் சொல்கூறு செயப்பாட்டு வினையைக் காட்டும் என்றும் பழந்தமிழ் நூல்களில் செயப்பாட்டுத் தொடர்களைக் காணமுடியும் என்றும் கூறியுள்ளார் இவர்.

1.	எழுத்து எனப்படுப	(தொல். எழுத்து, 1)
2.	சொல் எனப்படுப	(தொல். சொல், 158)
3.	பெயர் எனப்படுபவை	(தொல் சொல், 160)
4	வினை எனப்படுவது	(தொல் சொல், 198)
5	இடை எனப்படுவ	(தொல் சொல், 249)
6.	ஆளப்படும்	(திருக்குறள், 511)
7.	எண்ணப்பட	(திருக்குறள், 922)
8.	ஓம்பப்படும்	(திருக்குறள். 131)
9.	இயற்றப்பட்ட	(சிந்தாமணி 190)
10.	ஆக்கப்பட்ட	(சிந்தாமணி, 534)

போன்ற பல இடங்களில் செயப்பாட்டுவினை வந்துள்ளமை காணலாம். இதனுல் தமிழ் இலக்கண அறிஞர்கள் பலர் கால்டுவெல் கருத்து உண்மைக்குப் புறம்பானது எனக் கூறி யிருக்கக் காண்கிருேம்.[2]

இத்தகைய இடங்களைக் கால்டுவெல் அறியாதிருந்தாரா? என்றும் அறிந்திருப்பின் எங்ஙனம் திராவிட மொழிகளில் செயப்பாட்டுவினை இல்லை எனக் கூறினுர் என்றும் வினவலாம். கால்டுவெல்லே தம்முடைய நூலில்

11. கொல்லப்பட்டான்

போன்ற தொடர்களைத் தந்துள்ளார். தமிழில் காணப்படும் செயப்பாட்டு வினை எவ்வாறு காட்டப்படுகிறது என்றும் வட மொழி போன்ற பிற மொழிகளில் எவ்வாறு உணர்த்தப்படு கிறது என்றும் ஆராய்ந்த நிலையில் திராவிட மொழியில்

1. Chidambaranathah Chettiar, 1938, pp 124–133, 1939, pp. 22–34.

2 தொல்காப்பியர் தன்னுடைய நூலில் செயப்பாட்டு வினை பற்றிக் குறிப்பிடாவிடினும் செயப்பாட்டு வினைகளைப் பயன் படுத்தியுள்ளார். எனக் கூறி சில எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளார் திரு இலக்குவனுர். இதனுல் பழந்தமிழில் செயப்பாட்டு வினை பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறி இதனுல் கால்டுவெல்லின் கொள்கை தவறுஎனக்காட்டுகிருர். S. Ilakkuvanar, 1946, pp. 133-134.

காணப்படும் இவ்விலக்கணக் கூறு "ஒட்டினால் (Inflectional suffix) காட்டப்படுவதில்லை" என்றும் "வாக்கியத் தொடரினால் தான் காட்டப்படுகிறது" என்றும் கருதினமையால்தான் கால்டுவெல் மேற்கண்ட முடிவிற்கு வந்துள்ளார் என்பது அவரது நூலைப் படிப்பார்க்கு நன்கு விளங்கும். [1]

செயவென் எச்சத்துடன் "படு" இணைவதால் ஏற்படுவது தொடர் என்பது அவர் கருத்து. எனவே தமிழில் செயப்பாட்டு வினை உள்ளதா இல்லையா என்ற வாதம் 'செய+படு' என்பது தொடரா? அல்லது சொல்லா? என்ற வாதத்தின் முடிவைப்பொறுத்து அமையக்காண்கிறோம் டாக்டர் சிதம்பரநாதன் "தொடர்" என்ற கால்டுவெல் கருத்தையும் மறுப்பார்.[2] எவ்வாறாயினும் செயப்பாட்டு வினையைக் குறிக்கும் பண்பு தமிழ் மொழிக்குள்ளது என்பது உண்மையாகும். அடுத்து

12 வெட்கப் பட்டான்
13. கஷ்டப் பட்டான்
14. துன்பப் பட்டான்
15. வருத்தப் பட்டான்

போன்றவை செயப்பாட்டு வினையாகக் கருதப்படுகின்றன. [3] 'படு' என்ற ஒட்டினைக் கண்டவுடன் எதையும் செயப்பாட்டு வினை எனக் கருதுதல் தவறாகும். இவண் 'படு' துணைவினையாக இல்லாமல் பெயருடன் வந்த வினையாகவே நிற்கிறது. இதனால்தான் இவற்றிலிருந்து

16. பட்ட வெட்கம்
17. பட்ட கஷ்டம்
18. பட்ட துன்பம்
19. பட்ட வருத்தம்

என்ற பெயர்த் தொடர்களைப் (noun phrases) பெற முடிகிறது செயப்பாட்டு வினைகளிலிருந்து பிறவினைத் தொடர்களை (transitive) பெறுதல் முடியாது. ஆனால் "வெட்கப் பட்டான்" போன்றவற்றிலிருந்து

---

1. It is evident that the compound of *pad-u*, to suffer, with an infinitive or noun of quality, is rather a phrase than a passive voice.
Caldwell, 1961, p. 467.
2. Chidambaranathan Chettiar, 1939, p. 23.
3. Caldwell, 1961, p. 466.

20. வெட்கப் படுத்திஞன்
21. கஷ்டப் படுத்திஞன்
22. துன்பப் படுத்திஞன்
23. வருத்தப் படுத்திஞன்

போன்ற தொடர்களை உருவாக்க முடியாது [1] எனவே "வெட்கப் பட்டான்" போன்றவை தன்வினையாகவே (intransitive உள்ளமை கண்கூடு மேலும்

24. வெட்கப் படுத்தப் பட்டான்
25. கஷ்டப் படுத்தப் பட்டான்
26. துன்பப் படுததப் பட்டான்
27 வருத்தப் படுத்தப் பட்டான்

போன்ற தொடர்களும் மேலே குறிக்கப்பட்டவை செயப்பாட்டுவினைச் சொற்கள் அல்ல என்பதைக் காட்டும்.

இதுபோன்றே

28. அடி பட்டான்
29 பிடி பட்டான்
30. உதைப் பட்டான்
31. குட்டு பட்டான்

போன்றவற்றையும் செயப்பாட்டு வினையாகக் கருதுகின்றனர். [2] மேலெழுந்த வாரியாக நோக்குமிடத்து இது சரியாகவே தோன்றும். இவற்றைச் சாதாரணமாக ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் போதும்.

32. he was beaten
33. he was caught
34. he was kick d
35. he was cuffed

எனச் செயப்பாட்டு வினையிலேயே மொழி பெயர்க்கிறேம். இந்நிலையில் இவற்றை முறையே

36. அடிக்கப் பட்டான்
37. பிடிக்கப் பட்டான்
38. உதைக்கப் பட்டான்
39. குட்டப் பட்டான்

---

1. A. H. Arden, 1954, p. 283.
2. Jothimuthu, 1965, p. 164.
   Caldwell, 1961, p. 467.
   Arden, 1954. p. 235.

என்பவற்றுடன் ஒப்பவைத்து பேசுகிறோம். இந்நிலை சரிதானா என்பதை நன்கு ஆராய்தல் வேண்டும்

தமிழ் மொழியில் செயபாட்டு வினைச்சொற்கள் மூன்றும் வேற்றுமைச் சொல்லைக் (எழுவாயாகக்) கொண்டு வருதல் காணலாம்.

40. சாத்தன் என்னால் அடிக்கப் பட்டான்
41. சாத்தன் என்னால் பிடிக்கப் பட்டான்
42. சாத்தன் என்னால் உதைக்கப் பட்டான்
43. சாத்தன் என்னால் குட்டப் பட்டான்
44. முகடியான் மூடப்பட்டார் (குறள். 936)
45. எரியாற் சுடப் படினும் (குறள் 893)
46. அறிவுடையோரால் முயலப்படும் (குறள்)

என்பவற்றில் காணப்படும் செயப்பாட்டு வினைகள் மூன்றும் வேற்றுமைச் சொல்லைக் (என்னால் போன்றவை) கொண்டு வருவது காணத்தக்கது. இதுபோலவே

47. சாத்தன் என்னால் அடிபட்டான்
48. சாத்தன் என்னால் பிடிபட்டான்
49. சாத்தன் என்னால் உதைபட்டான்
50. சாத்தன் என்னால் குட்டுப் பட்டான்

போன்ற வாக்கியங்களிலும் "என்னால்" போன்ற மூன்றும் வேற்றுமைச் சொற்கள் வரக்காண்கிறோம். ஆனால் முன்னவற்றில் வரும் 'என்னால்" என்ற சொல்லும் பின்னவற்றில் வரும் "என்னால்" என்ற சொல்லும் வேறு வேறு நிலையில் உள்ளன. முன்னதில் "அடித்தவன் நான்" என்பது தெளிவாகக் காட்டப்பட பின்னதில் 'வேறு யாரோ சாத்தனை அடிப்பதற்கு நான் காரணமாக இருந்தேன்" என்பது பெறப்படுதல் காணலாம் முன்னதில் "என்னால்" என்பது "நான்" என்பதன் திரிபாகவும் 'சாத்தன்' என்பது "சாத்தனை" என்பதன் திரிபாகவும் உள்ளன. அதாவது

51. நான் சாத்தனை அடித்தேன்

என்பதன் திரிபாகவே

சாத்தன் என்னால் அடிக்கப்பட்டான் (40)

என்ற வாக்கியம் உள்ளது. "சாத்தன் என்னால் அடிக்கப் பட்டான்" என்ற வாக்கியத்தை வைத்துக் கொண்டு "யார் சாத்தனை அடித்தார்கள்?" என வினவின் "நான் சாத்தனை

அடித்தேன்" என்ற விடையைத்தர முடியும். அடித்தல் தொழிலைச் செய்தவன் "நான்" என்பது தெளிவு "என்னால்" என மூன்றாம் வேற்றுமைச் சொல்லாக வந்துள்ள போதிலும் அது அடித்தல் தொழிலைச் செய்தவனைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால் "சாத்தன் என்னால் அடிபட்டான்" என்ற வாக்கியத்தில் வரும் "என்னால்" என்ற சொல் இப்பொருளைத் தருவதில்லை. இதில் வரும் "என்னால்" என்பது

52. சாத்தன் என்னால் வந்தான்
53. சாத்தன் என்னால நடந்தான்

போன்றவற்றில் வரும் 'என்னால்" போன்ற சாதாரண மூன்றாம் வேற்றுமைச் சொல்லாகும். எனவே தமிழில் காணப்படும் மூன்றாம் வேற்றுமைச் சொற்களை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

(1) சாதாரண 'ஆன்' வேற்றுமைச் சொற்கள்

(2) செய்வினை வாக்கியங்களில் எழுவாயாக வந்து, அவ்வாக்கியங்கள் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றப்படும் போது உருவாகும் "ஆன்" வேற்றுமைச் சொற்கள்.

இந்நிலையை இடமாற்று இலக்கணத்தார் (Transformationalists) விளக்குகின்ற முறைவேறு செயப்பாட்டு வினை வாக்கியங்களை செய்வினை வாக்கியங்களிலிருந்து உருவாக்குவதன் மூலம் இவற்றிடையே உள்ள தொடர்புகளை விளக்குவர்

நான் சாத்தனை அடித்தேன் (51)
சாத்தன் என்னால் அடிக்கப்பட்டான் (40)

இதனை கீழ் வரும் வரைபடம் நன்கு காட்டும்.



நான் — என்னால்
சாத்தனை — சாத்தன்
அடித்தேன் — அடிக்கப் பட்டான்

ஆனால் 'சாத்தன் என்னால் அடி பட்டான்' (47) என்ற வாக்கியம் செய்வினை வாக்கியமாகவே உள்ளது. இதனை

54. சாத்தன் அடி என்னால் பட்டான்

என மாற்ற முடிவதும் "சாத்தன் என்னால் அடிக்கப்பட்டான்" என்பதை இவ்வாறு மாற்ற முடியாமையும் இவை தம்முள் உள்ள வேற்றுமையைக் காட்டும்.

இன்னும்

55. அடிபடு என்பதை
56. அடிபடச் செய்
57. அடிபட வை

என "செய்வி" என்னும் வாய்பாட்டில் கொண்டுவர முடியும். ஆனால்

58. அடிக்கப்படு

என்பதை

59. *அடிக்கப்படச் செய்
60 *அடிக்கப்பட வை

எனக் கொணருதல் முடியாது. இதே நிலையைக் கன்னடம் தெலுங்கு முதலிய மொழிகளிலும் காணலாம்.

61. தெப்ப தின்னடு "அடி பட்டான்"
62 பெட்டு திந்த "அடி பட்டான்"
63. தெப்ப தினபஞ்சானு "அடிபடச் செய்தேன்"
64. பெட்டு தின்னிசிதெ "அடிபடச் செய்தேன்"

என மாற்ற முடியும். இதனாலும் "அடிபட்டான்" போன்றவை செயப்பாட்டு வினையல்ல என்பது விளங்கும்.

மேலும் 'அடிபட்டான்' போன்றவற்றில் காணப்படும் அடிபெயராகவும் 'பட்டான்' என்பது வினையாகவும் இருக்கக் காண்கிறோம். 'படு' என்பது துணைவினையாகவே 'அடி' என்பது முக்கிய வினையாகவோ இல்லை. இதனால்தான் இவற்றிலிருந்து

65. பட்ட அடி

66. பட்ட உதை

67. பட்ட இடி

போன்ற பெயர்த் தொடர்களை உருவாக்க முடிகிறது.

68 ஏச்சுப் பட்டேன்

69. பேச்சுப் பட்டேன்

போன்றவற்றிலுள்ள 'ஏச்சு', 'பேச்சு' போன்றவை இந் நிலையை உறுதிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. இதனு லும் இவை செயப்பாட்டு வினையல்ல என்பது தெரியவரும். மேலும்

70 'அவனிடம் அடிபட்டேன்'

71. 'இவனிடம் உதைபட்டேன்'

எனவருவதும் இவண் கவனித்தற்பாலது.

இன்னும்

72. அடி உண்டேன்

73 அடி பெற்றேன்

போன்றவற்றில் காணப்படும் 'உண்', 'பெறு' போன்றவற்றை யும் செயப்பாட்டு வினையெனக் கருதுவாரும் உளர். எவ்வாறு 'படு' செயப்பாட்டு வினையாக இல்லையோ அதே போன்று இவைகளும் செயப்பாட்டு வினைகளல்ல. முன்னையவற்றிற்குக் கூறிய வாதங்கள் அனைத்தும் இவற்றிற்கும் பொருந்துவன வாகவே உள்ளன. மேலும் இவற்றை செயப்பாட்டு வினை களாகக் கொள்ளின்

74 அடி வாங்கினேன்

75. அடி கொண்டேன்

போன்றவற்றையும் செயப்பாட்டு வினைகளாகக் கொள்ள வேண்டிய நிலையும் உண்டாகும் எனவே இதுகாறும் கூறிய வற்ருல் "அடிபட்டான்" போன்றவை செயப்பாட்டு வினைக ளல்ல என்பதும் இவற்றை "அடிக்கப் பட்டான்" போன்ற வற்றுடன் ஒப்பவைத்து எண்ணுவது பொருந்தாது என்பதும் தெரியவரும்.

(தொடரும்)

பத்திரிகை முதல்வர் திரு. வி. க.

திரு. சாலை இளந்திரையன்,
எம். ஏ. எம். லிட்., டிப்-இன- யூ. என. அய். யூ.

"ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அலங்கரித்த பத்திராசிரியர் ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும், தீரமும், நேர்மையும், கலங்காமையும், பாரபட்சமின்மையும், அவசியம் நேர்ந்தபோது காட்டிய நிர்த்தாக்ஷணியமும் பத்திராசிரியத் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின."[1] திரு. வி. க. அவர்களைப் பற்றி வ. வே. சு. அய்யர் கூறியுள்ள கருத்து இது.

இங்கே குறிப்பிடப்படுவதும், திரு. வி. க. ஆசிரியப் பொறுப்பேற்று வெளியிட்டு வந்ததுமான "தேசபக்தன்" என்னும் தமிழ் நாளிதழ் 7—12—1917இல் தொடங்கியது. அதன் ஆசிரியராகத் திரு. வி க இருந்தது சுமார் இரண்டரை ஆண்டுக் காலமே. இந்தக் குறுகிய காலத்தில் அவர் செய்த சாதனையே தமிழ்ப் பத்திரிகை உலகில் அவருக்கு உயர்ந்தோர் இடத்தை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது. அதன் விளைவாகத் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருந்த உணர்ச்சியையே, அய்யரின் மேலே குறிப்பிட்ட பாராட்டு எதிரொலிக்கிறது.

தேசபக்தனில் பெற்ற "தலைசிறந்த பத்திரிகை ஆசிரியர்" என்னும் பெருமையைத் தமது "நவசக்தி"ப் பணிகளால் காத்துப் பெருக்கி நிலைநிறுத்தினர் திரு. வி. க.

பாய்ந்தது புதுமை

தமிழ் இலக்கியம், தமிழ் ஆராய்ச்சி போன்ற துறைகளில் புதுமையைப் பாய்ச்சிய பல பெரியோர்களைப் போல், தமிழ்ப் பத்திரிகைத் துறையில் ஒரு புதுமையைப் பாய்ச்சி அதற்குத் தனித்தன்மையும் தமிழ்த் தன்மையும் ஊட்டிய முதல்வர் திரு. வி. க. வே.

"இந்தியாவின் சுதந்திர சரித்திரத்தில் தேசபக்தனுக்கு நிரந்தரமான ஒரு ஸ்தானம் உண்டு. இந்தப் பத்திரிகை தான் தமிழ் நாட்டில் தேசீய உணர்ச்சியை நேரியமுறையில் தமிழ்ப்பண்போடு கலந்து ஊட்டிவந்தது என்று சொன்னல்

---

1. புலவர் அரசு. வ. வே. சு. அய்யர். பக்கம், 72

அது சரித்திர உண்மைக்கு எவ்விதத்திலும் புறம்பான தாகாது."[2] தமிழ் நாட்டில் ஏற்கனவே பல பத்திரிகைகள் இருந்தும், "நேரிய முறையில் தமிழ்ப்பண்போடு தமிழர்க்குத் தேசீய உணர்ச்சி ஊட்டத்" திரு வி. க வின் ஆசிரியப் பொறுப்பில் தேசபக்தனே வரவேண்டியதிருந்தது. அதனாலே தான் தமிழ்ப்பத்திரிகை முதல்வர் என்ற சிறப்பு அவரைச் சென்றடைகிறது.

பிறந்து மொழி பயின்று... ...

பூவிருந்தவல்லிக்கு அருகில் உள்ள துள்ளம் என்னும் சிற்றூரில் 1883இல் பிறந்த கலியாணசுந்தரம் படித்துப் பல துறைப் பணிகளாற்றி, திரு. வி. கலியாணசுந்தர முதலியா ராகி திரு. வி. க., தமிழ்முனிவர் என்னும் செல்வச் சிறப்புப் பெயர்கள் பெற்று 1953இல் சென்னையில் காலமானார். இந்த எழுபது ஆண்டுகளில் அவர் ஆற்றியுள்ள பணிகளும் வாழ்ந்து காட்டிய சீலமும் தமிழ்க்குலத்துக்கே பெருமை சேர்க்கக் கூடியவை.

திரு. வி. க. வுக்கு இளமை முதலே தமிழார்வம் மிகுதி; ஆங்கில ஆர்வமும் அப்படியே. யாழ்ப்பாணம் நா. கதிரை வேல் பிள்ளையிடமும் மகாவித்துவான் தணிகாசல முதலியா ரிடமும் தமிழ் இலக்கண, இலக்கியங்களையும் தத்துவ நூல்களையும் பாடம் கேட்டுத் தேர்ந்தார். ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றுக்கொண்டார். ஆயினும் அவருடைய தொண்டு தமிழ் வெள்ளமாகவே பெருக்கெடுத்தது.

சிறிது காலம் ஸ்பென்சர் கம்பெனியில் வேலைபார்த்து வந்தார் திரு. வி. க. அந்த நாளிலேயே (1905-1908 வாக்கில்) தேசீய உணர்ச்சி அவரை ஆட்கொள்ளத் தலைப்பட்டது. ஆயினும் குடும்பப் பொறுப்பு அவரை அவ்வளவு எளிதில் பொதுப்பணியில் குதிக்க விடவில்லை. வெசுலியன் மிஷன் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்து சிறிது காலம் பணி புரிந்தார்.

அக்காலத்தில்தான் அவருக்குத் திருமணம் நடைபெற்றது. மனைவி கமலாம்பிகை அம்மையாருடன் முதலியார் மிகக் குறுகிய காலமே வாழ்ந்தார். அவருடைய முப்பத்து மூன்றும் வயதிலேயே கமலாம்பிகை காலமானார்.

2. வெ. சாமிநாத சர்மா: நான் கண்ட நால்வர்; பக்கம், 169

கல்யாணசுந்தரரின் வாழ்வு மீண்டும் பிரமச்சரிய வாழ்வாயிற்று; எழுபது வயதில் அவர் இறக்கும் வரை, அவர் வாழ்வு தூய பிரமச்சரிய வாழ்வாகவே நடைபெற்றது.

பத்திரிகை ஆசிரியர்

1916இல் வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியரானார் கல்யாணசுந்தரர். அந்தப் பதவியில் அவர் வெகு காலம் இருக்கவில்லை. அப்போது நாடெங்கும் பரவிவந்த "சுயஆட்சிக் கிளர்ச்சி" அவரைத் தன்பால் கவர்ந்து இழுத்தது. தேசிய இயககம், மொழிப்பற்று என்னும் வேரின்றி மேலாக மிதந்து வந்த நிலையும் அவரைச் சிந்திக்கத் தூண்டியது. தமிழகத் தேசீய இயக்கம் ஆங்கிலத்தில் நடைபெற்றால் அது மக்கள் இயக்கமாக வலுப்பெறாது என்பது அவருக்குப் புலப்பட்டது. தேசீய இயக்கத்தில் அந்தக் குறையை நிறைவு செய்வோரும் அப்போது வேறு யாரும் இல்லை. எனவே, 5—12 1917இல் தமது தமிழாசிரியப் பதவியினின்று விலகி 7—12—1917இல் "தேசபக்தன்" என்னும் புதிய தமிழ் நாளிதழின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றார் திரு. வி. க.

தமிழாசிரியர் என்றால் "ஆடுசாபட்டி அம்மையப்ப பிள்ளை"யையே நினைத்துக்கொண்ட அக்கால மேதாவிகள், "ஒரு தமிழாசிரியர் பத்திரிகை ஆசிரியராவதாவது? அதுவும் தேசீய இயக்கத் தொடர்புடைய பத்திரிகையிலா...!" என்று மூக்கின்மேல் விரலை வைத்தார்கள். தமிழாசிரியர் என்றால் ஒரு தஞ்சாவூர்ப் பொம்மை என்று ஆங்கிலம் படித்த அதி மேதாவிகள் கருதிவந்த காலம் அது. சில தமிழாசிரியர்களும் அப்படித்தான் இருந்துவந்தார்கள்! அந்தச் சூழ்நிலையில், ஒரு தமிழாசிரியர் தேசீயப் பத்திரிகை நடத்துவதற்காகத் தமது தமிழாசிரிய வேலையை விட்டே விலகினார் என்றால், அது வியப்பை ஏற்படுத்தாமல் இருந்தால்தானே வியப்பு ?

புலமைக்குப் பெருமை

"முதலியார் கல்லூரியின் ஆசிரியபீடத்தைத் துறந்து விட்டு, பத்திரிகையின் ஆசிரியபீடத்தில் அமர்ந்தபோழ்து அவருடைய நெருங்கிய நண்பர்களாகிய புலவர்மணிகள் பலர் அவரைத் தடுத்தார்கள். கல்லூரி ஆசிரியப் பதவியை

துறந்துவிட வேண்டாமென்று அவருக்குப் பக்கம் பக்கமாகக் கடிதங்கள் எழுதினார்கள்...அவர் கேட்கவில்லை முதலியார் கல்லூரியை விடுத்ததன் விளைவாகப் புலமைக்கும் பெரு நஷ்டம் ஏற்பட்டுவிட்டதென்று அப்பொழுது புலவர்கள் வருந்தினார்கள்; பின்னர், முதலியாரின் தேசத் தொண்டி னாலும் புலமைக்குப் பெருமை ஏற்பட்டதாகப் பெருமை கொண்டார்கள்."[3]

ஒரு நல்லாசிரியராகவும், தமிழ்ப் புலவர்களுள் தலைசிறந்த ஒருவராகவும் வாழ்ந்துமுடிந்திருக்க வேண்டிய திரு. வி. கல்யாணசுந்தரர், தேசப்பணிக்கும் பத்திரிகைப் பணிக்கும் வந்ததால் தமிழாசிரிய உலகம் ஒரே ஒரு ஆசிரியரை இழந்தது. அங்கும், இழந்ததென்று சொல்லமுடியாது; அவரை வழங்கி யதற்குக் கைமாருகத் தமிழ்ப் புலவர் உலகம் பெரும்புகழையே பெற்றுக்கொண்டது. தமிழ்ப் பத்திரிகை உலகமோ ஒரு பெரும் புரட்சியையே பெற்றது.

'பக்தன்' பணி

'தேசபக்தன்' தொடங்கிய சூழ்நிலையையும் அச் சூழ்நிலை யில் 'பக்தன்' செய்த தொண்டினையும் பற்றித் திரு. வி. க. பின்னுளில் கூறியிருப்பது இது: "அந்நாளில் நாட்டுமொழிப் பத்திரிகைகளில் அயல்மொழி நாற்றம் வீசும். அரசியல் குறி யீடுகள் அந்நியத்தில் அப்படியே பொறிக்கப்படும். "தேச பக்தன்" பத்திரிகையுலகிற் புரட்சி செய்தான். படிப்படியே செய்தான். புரட்சி நிகழ்ந்ததென்று பத்திரிகையுலகிற்கே தெரியாது புரட்சிகளைத் தேசபக்தனிற் காணலாம். தேச பக்தன் தமிழாக்கிய அரசியற் சொற்களும் சொற்றொடர்களும் குறியீடுகளும் இப்போது பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பிறவிடங்களிலும் ஏற்றமுற்று அரசுபுரிதல் வெள்ளிடைமலை

"தமிழ் நாட்டில் பல குறைபாடுகள் உண்டு. அவைகளில் ஒன்று பெருந்தலைவர்கள் தமிழ் தெரியாதென்று ஆங்கிலத் தில் நாவன்மை காட்டி வந்தமை. அதுபற்றித் 'தேசபக்தன்' எழுப்பிய கிளர்ச்சி தலைவர்களைத் தமிழ் பேசச்செய்தது. இந் நாளில் தென்னாட்டு மாநாடுகளின் நிகழ்ச்சி முறைகளும் காரியக் கூட்டங்களின் நிகழ்ச்சி முறைகளும் தாய்மொழியில் நடைபெற்று வருவது கண்கூடு. மேடைகளிற் பேசுதற்

3. நான் கண்ட நால்வர்: பக்கம், 76

பொருட்டுத் தலைவர்கள் தேசபக்தனைப் படித்ததும், தமிழா ராய்ந்த ஐரோப்பியப் பாதிரிமார் பலர் தேசபக்தன் சந்தா தாரராயதும் ஈண்டுக் குறிக்கத்தக்கன. 'தேசபக்தன்' தமிழரை அந்நியமொழி மோகத்தினின்றும் விடுவித்தானென்று சொல்வது மிகையாகாது" 4

ஒரு பானைச் சோற்றுக்கு...

அக்காலத்தில் தேசபக்தனில் இவர் எழுதிய தலையங்கங்களும் கருத்துக் குறிப்புக்களும் இதை மெய்ப்பிக்கின்றன; "தமிழ் மொழியின் தொன்மையும் அதன் மாண்பும் முன்னர் இருமுறை எழுதப்பட்டுள்ளன. தமிழில் உயரிய நூல்கள் பல இருக்கின்றன... அவையாவும் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாக்கப்பட்டவை. அந்நூல்களில் இயற்கைவனப்பும் பிற சுவைகளும் மலிந்து கிடக்கின்றன. பிற்காலத்தில் அத்தகைய நூல்கள் ஒருவராலும் எழுதப்படவில்லை. வரவரத் தமிழ்வளம் அருகலாயிற்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாகரிகமுற்ற அறிஞர்களால் பேசப்பெற்றுப் பண்பட்ட ஒரு மொழியின் வளங்குன்றியதற்குக் காரணம் என்ன? அம்மொழியின் மாட்டுப் பலர்க்குப் பற்றின்மையேயாகும். நேற்றுத் தோன்றி இன்னும் பண்படாத கலப்பு மொழியாகிய ஆங்கிலம் செழித்தோங்குவதற்குக் காரணம் யாது? அம்மொழியாளர் அதன்மாட்டார்வங்கொண்டுள்ளமையேயாகும். இந்தியாவிலும் அன்னார் தம்மொழியை நியாயஸ்தலத்திலும், சட்டசபையிலும், பிறவிடங்களிலும் கட்டாயமாகப் பேசவேண்டுமென்னும் நியதி ஏற்படுத்தியிருக்கின்றனர். சர்வகலாசாலையில் இவ்விப்பட்டம் பெற்றோரே இவ்விவ் வேலைக்கு அருகர் என்னும் விதியையும் பிறப்பித்திருக்கின்றனர். வயிற்றின் கொடுமைக்காக ஜனங்கள் எம்மொழி பயில விருப்பங்கொள்வார்கள்? அவர்கள் ஆங்கில மொழியைப் பயில வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது அதனால் தேச வழக்க ஒழுக்கங்களும் தேசாபிமானமும் அற்றுப்போகின்றன.

பண்டைத் தமிழர் வழக்கஒழுக்கங்கள் நிலவ வேண்டுமாயின். முதலாவது தமிழ்மொழி வளர்ச்சிக்கு உழைத்தல் வேண்டும். ஒருவர் இருவர் சேர்ந்து சங்கங்கள் ஏற்படுத்தி

---

4 திரு வி க வாழ்க்கைக் குறிப்புகள் பக்கம், 268·

உழைத்து வருதலால் சிறிதும் பயன் விளையாது. அரசகாரிய முழுவதும் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். அப்பொழுது தமிழ் ஆக்கமுறும்" [5] 'பாஷை வளர்வது எப்படி'? என்னும் தலைப்பில் எழுதப்பட்ட குறிப்பின் ஒரு பகுதி இது

"நமது நாட்டில் ஏழைத் தொழிலாளர்களே பெரிதும் நிரம்பியிருக்கிறார்கள் இவர்தம் முன்னேற்றத்துக்காக இது காறும் காங்கிரஸ்காரராதல், பிறராதல் உழைக்க முன்வந்தாரில்லை ஏழைத் தொழிலாளரைக் கவனியாது சுயராஜ்ஜியக் கூச்சலிடுவதால் சிறிதும் பயன் விளையாது. காங்கிரஸில் இதுகாறும் செய்யப்பட்ட தீர்மானங்கள் யாவும் கற்றவர்கள் முன்னேற்றத்தைப் பற்றியனவேயாகும். இத்தீர்மானங்களால் தேச முன்னேற்றமடையாதென்பது திண்ணம். கற்றவர்கள் ஒன்றுகூடித் தங்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருவதையும், அவர்கள் ஏழைத் தொழிலாளர்களைக் கவனியாது வாளா காலங் கழித்து வருவதையும், அரசாங்கத்தார் நன்கு உணர்ந்து சிறுசிறு சீர்திருத்தங்களையே வழங்கிக்கொண்டு வருகின்றனர். ஏழைத் தொழிலாளர் அரசியல் ஞானமுடையவராகிச் சுய ஆட்சிக் கிளர்ச்சியில் ஈடுபட்டால்தான் அரசாங்கத்தார் சுய ஆட்சி வழங்குவர் என்பதிற் சந்தேகமில்லை. ஏழைத் தொழிலாளர் முன்னேற்றத்துக்குப் பாடுபடாமல் கற்றவர் சிலர் சேர்ந்து கொண்டு சுயஆட்சிக் கூச்சலிட்டு அதைப் பெற முயல்வது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதையொக்கும். உண்மையாகச் சுயஆட்சிக் கிளர்ச்சி செய்வோர் ஏழைத் தொழிலாளரது முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவர். ஏழைத் தொழிலாளர்க்காகப் பாடுபட முன்வராது சுயஆட்சிக் கிளர்ச்சி செய்வோரை என்னென்று கூறுவது? அவர், சட்டசபையிலாவது, நிருவாக சபையிலாவது அங்கத்தவராக வேண்டுமென்று எண்ணங்கொண்டு ஆரவாரஞ் செய்பவரேயாவர். இத்தகையினரை ஜனத்தலைவராகக் கொள்ளலாமோ?" [6] இது, "தொழிலாளரும் ஜனத்தலைவரும்" என்னும் தலைப்பில் வந்த கருத்துரையின் ஒரு பகுதி.

"தற்காலச் சர்வகலாசாலையால் நாட்டிற்கு நன்மையின்மையால், நாட்டிற்கு நன்மை பயக்கக் கூடிய சுதேசக்

5. தேசபக்தன் : 9—2—1918.
6. தேசபக்தன் 15—10—1918

கல்விமுறைச் சர்வகலாசாலையை ஏற்படுத்த நமது தலைவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள் ரவீந்திரநாத் தாகூர் முதலிய பெரியோர்கள் இம்முயற்சியில் பெரிதும் ஊக்கங்கொண்டு உழைக்கின்றார்கள். தேச வளர்ச்சிக்குக் கருவி சுதேசக் கல்வியென்பது பல அறிஞர் கொள்கையாகும். ஆனால் நமது ஸர். பி. எஸ். சிவசாமி ஐயர் அவர்கட்கு மாத்திரம் சுதேசக் கல்வி விரோதமாகத் தோன்றுகிறதாம். ஐயர் அவர்கள் சென்னைச் சர்வகலாசாலையின் வைஸ்சான்ஸலர் என்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். தற்காலம் நிருவாகசபையில் இந்திய அங்கத்தவராயுள்ள திவான் பஹதூர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழ் இஷ்டபாடமாக மாறினமையால். அது வளர்ச்சிபெறுகிறது என்று கூறுகின்றார்கள். அவர்கள் எக்காரணம் பற்றி இங்ஙனம் கூறுகிறார்களோ தெரியவில்லை. தேச பாஷை இஷ்டபாடமாக இருப்பதற்கு மகிழ்வுறும் ஒருவர் இந்திய அங்கத்தவராக நிருவாக சபையில் வீற்றிருக்கின்றார் நமக்கென்ன குறைவு?" வேதனை நிரம்பிய கிண்டலோடு முடியும் இக்குறிப்பு 'சர்வகலாசாலை' என்னும் தலைப்பில் 20—2—1919 தேசபக்தனில் எழுதப்பட்டுள்ளது.

'என்ன தமிழ்!'

காலஞ்சென்ற கல்கி கிருஷ்ணமூர்த்தி திரு. வி. க. வின் "நவசக்தி" இதழில் சில காலம் துணையாசிரியராகப் பணியாற்றியவர். பிற்காலத்தில் பத்திரிகை ஆசிரியராகப் பெரும் பெயர் பெற்ற இவர் தேசபக்தனின் தொண்டைப் பற்றிக் கூறியுள்ளது இங்கு ஒப்புநோக்கத்தக்கது:

"...தேசபக்தன் இதழ்களைப் பார்க்கப் பார்க்க, என்ன துணிச்சல்! என்ன ஆர்வம்! எத்தகைய அரசியல் நுட்பம்? எவ்வளவு தீவிர தேசபக்தி! என்ன தமிழ்!" என்று தமிழ் நாடே வியந்துகொண்டிருந்தது.

"எல்லாவற்றிலும் அதிக வியப்பு "என்ன தமிழ்!" என்பதற்காகத்தான் அதுவரையில் தமிழ்நாட்டில் தனியாட்சி நடத்திக்கொண்டிருந்த, ஒரே தினசரிப் பத்திரிகை "சுதேசமித்திரன்" ஆகும். அதில் வந்த தலையங்கங்கள் ஏறக்குறையப் பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:

"பெங்கால் புரோவின்ஷியல் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகா சரண் மஜூம்தாரின் பிரஸிடென்ஷியல் அட்ரெஸில் இந்தியப் பிரஜைகளின் தேசீய அபிலாஷைகளை அடக்க இந்திய புயுராக்ரஸி கையாண்டுவரும் ரிப்ரஷன் முறைகளின் உபயோகமற்ற தன்மையைப் பற்றிக் கரதலாமலகமாய்க் கூறி யிருப்பது ஹிஸ் எக்ஸெலென்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுமென்று நம்புகிறோம்."

"(இது பழைய "சுதேசமித்திரன்" பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டதன்று; சு. மி. யின் அக்காலத்திய நடையை எடுத்துக் காட்டுவதற்கான சொந்தக் கற்பனை)

இதே விஷயத்தைத் "தேசபக்தன்" பத்திரிகை எழுதி இருக்கக்கூடிய முறை பின்வருமாறு: வங்கத்தாயின் புதல்வர் கள் அண்மையில் மாகாண மகாநாடு கூடினார்கள். திரு. அம்பிகாசரன் மஜூம்தார் என்னும் வங்க வீரர் தலைமை தாங்கி அரியதொரு சொற்பொழிவு ஆற்றினர் அச்சொற் பொழிவில் இந்திய அதிகாரவர்க்கத்தார் இந்தியக் குடிமக்களின் விடுதலை வேட்கையைத் தகைவதற்குக் கையாளும் அடக்குமுறைகளைக் கடிந்தார். அம்முறைகள் பயனற்றன என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெற்றென எடுத்துக்காட்டியுள்ளார். இச்செவ்விய உரைகள் மேன்மை தங்கிய இந்திய இராஜப் பிரதிநிதியின் திருச் செவியில் ஏறுங்கொல்."

"அரசியல் விஷயங்களைப் பற்றித் தமிழிலே பேச முடியாது எழுத முடியாது என்று கருதப்பட்டு வந்த அந்தக் காலத்தில், மிகவும் சிக்கலான அரசியல் விஷயங்களெல்லாம் "தேசபக்த"னில் தூய தமிழில் எழுதப்பட்டு வந்தன. உணர்ச்சியோடும் ஆர்வத்தோடும் எழுதப்பட்டு வந்தன. தமிழ்நாடு திகைப்பும் வியப்பும் அடைந்ததில் ஆச்சரியம் என்ன?"[7]

தேசபக்தனிலும் நவசக்தியிலும் தொண்டாற்றிய சாமிநாதசர்மா அவர்கள் கூறியுள்ள கருத்துக்களை முன்பே பார்த்தோம்: (இந்தியாவின் சுதந்திர சரித்திரத்தில் .... புறம்பானதாகாது").

7. கல்கி: பாரதி பிறந்தார்: பக்கம் 46–47.

இந்த இரண்டு தமிழ் எழுத்தாளர்களும், கருத்துவகையிலும் அவற்றை வெளியிடும் தோரணையிலும் வேறுபட்டவர்கள். முன்னவரின் நகைச் சுவை நாட்டத்தையும் கொள்கை வகையிலான ஒரு பிடிவாதத்தையும், பின்னவரின் விநயமான போக்கையும் நாம் நன்கறிவோம். முன்னவர் திரு. வி. க வின் தமிழ்நடையை அப்படியே பின்பற்ற விரும்பாதவர்; பின்னவரோ, அந்த நடையை ஏற்றுப் போற்றுபவர் ஆனால் திரு வி. க. வின் பத்திரிகைத் துறைச் சாதனையில் இருவரும் ஒரே கருத்துக்கொண்டுள்ளார்கள். அதாவது, எந்த நோக்கினரும் ஏற்றுப் போற்றத்தக்க விதமாக அமைந்திருந்தது திரு. வி. க. வின் பத்திரிகைத் தமிழ்ப்பணி.

விளங்கச் சொல்லு

தமிழின் முதல் தினசரிப் பத்திரிகையாகிய சுதேசமித்திரனில் சுமார் ஆறு ஆண்டுகள் பணியாற்றிய பாரதி, அக்காலப் பத்திரிகைத் தமிழைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்! "தமிழ் நாட்டிலோ முழுதும் தமிழ் நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபதிகளிடம் காணப்படுகிறது. முதலாவது, நீ, எழுதப் படுகிற விஷயத்தை இங்கிலீஷ் தெரியாத ஒரு தமிழனிடம் வாயினால் சொல்லிக்காட்டு. அவனுக்கு நன்றாக அர்த்தம் விளங்குகிறதா என்று பார்த்துக்கொண்டு பிறகு எழுது. அப்போதுதான் நீ எழுதுகிற எழுத்து தமிழ் நாட்டிற்குப் பயன்படும்." [8]

"தேசபக்தன்", "நவசக்தி" இதழ்களைப் படிக்கையில், திரு. வி. க, அவற்றிலுள்ள செய்திகளை மானசிகமாகத் தம்முடைய தமிழ் மக்களிடம் சொல்லிக்கொண்டே எழுதியிருப்பதாகவே தெரிகிறது .. "அரசியல் கருத்துக்களைத் தமிழில் பேசமுடியாது என்று கருதப்பட்டு வந்த அந்தக் காலத்தில், மிகவும் சிக்கலான அரசியல் நடப்புகளெல்லாம் தேசபக்தனிலும் நவசக்தியிலும், தூய தமிழில் ஆர்வத்தோடும் உணர்ச்சியோடும் எழுதப்பட்டன. தமிழ் ஏடுகளில் பயின்று வந்த நடை பெரும் புரட்சிக்கு உள்ளாயிற்று." [9]

---

8. பாரதியார் கட்டுரைகள் (1964): பக்கம், 151–152
9. எழுத்தாளர் கல்கி (தொகுப்பு) 1966: பக்கம், 10-11

"இன்று அரசியல் பாஷையில் வழங்கும் அநேக சொற்கள் திரு. வி. க.வின் சிருஷ்டிகளே. புதிய ஆங்கிலப் பதங்களுக்குப் பொருத்தமான தமிழ்ப்பதங்களை உண்டாக்குவதில் திரு. வி. க வுக்கு இணை திரு. வி க. வே."10.. "அரசியல் கருத்துக்களை ஆங்கிலச் சொற்கலப்பின்றித் தனித்தமிழில் எவரும் புரிந்துகொள்ள வைக்கலாம் என்பதனைச் சாதித்தவர் (திரு. வி. க.) என்று பத்திரிகை உலகம் தீர்ப்புச் சொல்கிற்று." 11

நல்லதமிழ் எழுத வல்லாரும் மாட்டாருமாக உள்ள பலர் மேற்குறித்தவாறு இன்னும் சிறப்பாகவும் திரு. வி. க.வின் பத்திரிகைத்துறைத் தொண்டைப் போற்றுகிறார்கள். கலப்புத் தமிழ் மயமாகியிருந்த பத்திரிகை உலகையும், தமிழில் பேச முடியாது என்றெண்ணிவந்த தேசீயவாதிகளின் உள்ளத்தையும் தூய்மை செய்து ஓரளவாயினும் அவற்றில் தெளிவும் தன்னம்பிக்கையும் ஊட்டியவர் திரு வி க. வே.

பத்திரிகைத் தீரம்

இக்கட்டுரையின் தொடக்கத்தில் உள்ள வ. வே சு. அய்யரின் பாராட்டுக் குறிப்பில் திரு. வி. க. வின் பேரியல்புகள் பலவற்றைக் காணுகிறோம். பத்திரிகை என்பது வெறும் செய்திச் சேவகன் மட்டுமல்ல; சமயம் நேரும்போது, மக்களின் கருத்தைத் திட்டமாகவும் தெளிவாகவும் வெளியிடும் தீரனாகவும் அது விளங்கவேண்டும்.

திரு. வி. க. 'தேசபக்தன்' ஆசிரியராக இருந்த காலத்தில் பாரதி, வ. வே சு. அய்யர், அரவிந்தர் முதலிய தேசபக்தர்கள், ஆங்கில அடக்குமுறைக்குத் தப்பிப் புதுச்சேரியில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் "இந்தியா"வுக்குள் அடியெடுத்து வைக்கக்கூடாது என்று கடுமையான தடை விதிக்கப்பட்டிருந்தது "புதுவைத் தேசபக்தர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் பலவும் விலக வேண்டுமென்றும், அவர்கள் தாய்நாட்டில் விருப்பமான இடங்களுக்குச் செல்லவோ, அங்கு வசிக்கவோ வாய்ப்புப் பெறவேண்டுமென்றும் 'தேசபக்தன்' குரல் எழுப்பியது. தலையங்கம், உபதலையங்கம், அரிமாநோக்கு இவைகளில் அடிக்கடி இந்தப்

10. கு. அழகிரிசாமி: நான் கண்ட எழுத்தாளர்கள்: பக்கம், 69
11. சுகி சுப்பிரமணியன்: ஆயிரங்கால் மண்டபம்: பக்கம், 50

புதுவை வீரர்கள் இடம்பெற்று வந்தார்கள். இதன் விளைவாகவும், முதல் உலக மகாயுத்தத்தின் நெருக்கடி ஒருவாறு தணிந்துவிட்டதென்று அப்பொழுதைய அரசாங்கம் கருதியதின் காரணமாகவும் இவர்கள் மீதிருந்த தடைகள் அகன்றன "[12]

வ வே. சு. அய்யர் திரு. வி. க. வுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இச்சாதனையைப் பின்வருமாறு சுட்டிக் குறிப்பிட்டுள்ளார்: "... தாங்கள் 'பக்த'னில் அடிக்கடி எழுதியதின் பயனாக நான் ஆங்கில இலாகாவுக்கு யாதொரு நிபந்தனைகளும் தடையும் இன்றி வரலாம் என்று, அரசாங்கத்தார், என் சகோதரன் எழுதிய கடிதத்திற்குப் பதில் இறுத்திருக்கிறார். என் நன்றியை எதிர்பார்த்துத் தாங்கள் கிளர்ச்சி செய்ய வில்லையாயினும் என் மனமார்ந்த நன்றியைத் தங்களுக்கு நான் தெரிவியாமலிருத்தல் எங்ஙனம் சாத்தியம்?[13]

திருத்தும் பணி

பிற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றின் எந்த முக்கியமான திருப்பத்திலும் வேதனைதரும் அம்சம் ஒன்று காணக் கிடக்கிறது. அதனால் எந்த இயக்கமும் தமிழகத்தில் தோல்வி யடைந்தே வந்துள்ளது; பிற்காலச் சோழர்களின் பேரரசு இயக்கம் முதல் இருபதாம் நூற்றாண்டின் தேசீய, சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் வரை எல்லாவற்றிலுமே நாட்டு மக்களின் மொழியாகிய தமிழ் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது. பிறகு, அதற்கென்று ஒரு போராட்டம் கிளம்பி, முக்கியமான இயக்கத்தையே மடியச் செய்திருக் கிறது!

தமிழ்நாட்டுக்குள்ளே ஒரு காலத்தில் சமஸ்கிருதத்தில் காரியங்களை நடத்தினார்கள்; அதனால் சமய வழியாலும் அரசியல் வழியாலும் தமிழகம் பெற்றிருக்கவேண்டிய பேறு தமிழ்மக்களை எட்டாமல் போயிற்று. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தேசீய இயக்கத்தை (தமிழ் நாட்டில்) ஆங்கிலம் மூலமே நடத்தினார்கள்; அதனால் உண்மையான நாட்டுப்பற்று என்பது மக்கள் உள்ளத்தில் கிளர்ந்து எழாமலே போயிற்று. இனியும் ஆட்சி, நீதி, கல்வி முதலிய

12. நான் கண்ட நால்வர்: பக்கம், 86
13. வ. வே. சு. ஐயர்: பக்கம், 71

யாவற்றையும் (தமிழ்நாட்டில்) இந்தியிலேயே நடத்தப் போவதாகவே பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மொழி புறக்கணிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்து அவ்வப்போது சில அறிஞர்கள் குரல்கொடுத்தே வந்தார்கள். காங்கிரஸ் இயக்கக் காலத்தில் தமிழகத்திலே இந்தக் குரலைத் தீரமாக எழுப்பியவர் திரு. வி. க. வே ஓர் இயக்கமோ, அரசோ தவறான வழியில் சென்றால், முன்பெல்லாம், சான்றோர்கள் முன்சென்று எடுத்துரைத்து இடித்துரைப்பார்கள், இப்போது இந்தப் பணியைப் பத்திரிகையே செய்யவேண்டும். இந்த வகையிலேயும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு முன்னோடியாக விளங்குவன திரு. வி. க. வின் பத்திரிகைகளே.

தமிழ்க்குரல்

தேசபக்தன், நவசக்தி இதழ்களை இன்று புரட்டிப் பார்த்தால், சுதேசிகள் என்று பெயர் வைத்துக்கொண்டிருந்த தமிழ் நாட்டு விதேசிகளை மாற்றிவிட இந்தச் "சாது" எவ்வளவு தீவிரமாக முயன்றார் என்பது புலப்படுகிறது. தலையங்கம் என்னும் ஆசிரியக் கருத்து, சிலம்பொலி என்னும் தனிப் பகுதி இரண்டிலும் 'தமிழ்நாட்டில் தமிழ் வேண்டும், வேண்டும்!" என்றே கூவிக் கூவிக் கதறியிருக்கிறார் இந்தத் தமிழ் மனிதர்.

நாடு விடுதலை பெற நாட்டுமக்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றித் தேசீயவாதிகள் வாய்கிழியப் பேசி வந்தார்கள். பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே முழங்கி வந்தார்கள். அது, ஆங்கிலமும் தமிழுமல்லாத ஒரு மொழியில் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டுமிருந்தது. ஆயினும் அவை எல்லாம், "இல்லாத ஊருக்குச் செல்லாத பாதை" என்ற பாணியிலேயே அமைந்தன. அந்தச் சமயத்தில் தமிழர்க்கு உவப்பும் ஊட்டமுமான தமிழ்க் குரல் எழுப்பியவர் திரு. வி. க. ஒருவரே.

"எவனிடத்துப் பாஷாபிமானம் உரம்பெற்று நிற்கிறதோ, அவனிடத்து ஏனைய ஈரபிமானமும் நிலைபெற்று விளங்கும். பாஷை வளர்ச்சியே தேச வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் மூலமாயிருப்பது."[14]

14. தேசபக்தன்: 9—2—1918

"தமிழ்நாட்டைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டுமாயின், தமிழ்மக்கள் பலதிற உழைப்புக்களில் தலைப்படல்வேண்டும். தமிழ்மக்கள், முதலாவது தங்கள் மொழியினிடத்துப் பற்றுக்கொள்ளல் வேண்டும். மேலே கூறியபடி, தமிழ்மக்கள் எம்மதத்தைப் பற்றி ஒழுகினும் ஒழுகுக. அவர்கள் மொழிப்பற்றை மட்டும் விடுதலாகாது.

"நாட்டைப் பண்படுத்துங் கருவிகள் பல. அவைகளுள் சிறந்தது மொழி. ஆதலால், நாட்டவர்க்கு மொழிப்பற்று, இன்றியமையாதது. தமிழ்நாட்டில் திலகர் பெருமான் காந்தியடிகள் போன்ற தேசபக்தர்கள் தோன்றாமைக்குக் காரணம் தமிழர்களிடம் மொழிப்பற்றின்மையேயாகும்.

"வங்காளிகள் வங்கமொழியில் அளவிறந்த காதல் கொண்டிருக்கிறார்கள். மகாராஷ்டிரர் தம் மொழியில் பற்றுக் கொண்டு தேச சேவை செய்கின்றனர். அமிர்தசரஸ் காங்கிரஸ் வரவேற்பு உபந்நியாசமும், நாகபுரி காங்கிரஸ் வரவேற்பு உபந்நியாசமும் எம்மொழியில் நடைபெற்றன? ஹிந்தி, ஹிந்துஸ்தானி பாஷைகளில் நடைபெற்றன. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கூடின், தமிழில் வரவேற்பு உபந்நியாசம் நிகழப்பெறுமோ? மொழியினிடத்துப் பற்றில்லாதார் தேச சேவை, இடம்பத்தை அடிப்படையாகக்கொண்டதாக முடியும்.

"இப்பொழுது சில தலைவர்கள் கட்டுரைகளை முதலில் ஆங்கிலத்தில் எழுதிப் பின்னைத் தமிழில் மொழிபெயர்க்கும் வழக்கத்தை ஏற்றுவருகிறார்கள். அதுவும் கூடாது. தமிழிலேயே முதலில் கட்டுரைகளை எழுதப் பழகல்வேண்டும். கருத்துஞ் சொல்லும் செயலும் தமிழ்மயமாக இருத்தல் வேண்டும். பிற கருத்தும், பிற சொல்லும் பிற செயலும் தேசப்பற்றை வளர்க்கமாட்டா. ஆகவே, முதலில் தமிழ் மொழியை வளர்க்க தேசபக்தர்கள் முயலல்வேண்டும்.

"காங்கிரஸ் அமைப்பு இப்பொழுது புதுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் அமைப்பு, நமது தேசத்தைப் பாஷைக்கேற்றவாறு பிரித்திருக்கிறது. இதன் நோக்கம் யாது? அவ்வந்நாடு, அவ்வந்நாட்டில் வழக்க ஒழுக்கங்களை அவ்வந் நாட்டிற்கேற்றவாறு கொண்டொழுகல் வேண்டும் என்பதேயாகும். ஆதலால், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தார், தமிழ்நாட்டவரது முன்னைய நிலையை ஆராய்ந்து, அதற்கேற்ற முறைகளைக் கோலுவாராக.

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கூட்டத்தார் நிகழ்ச்சி முறைகளைத் தமிழிலேயே நடத்தல் வேண்டும்; மாருக நடப்பாராயின், நாட்டார் அவரைத் தமிழ்வழியில் நடாத்த முயலல் வேண்டும்."[15]

"மயிலாப்பூரில் ஒரு ஹிந்திக் கல்லூரி திறக்கப்பட்டது. அதன் திறப்புவிழா அழைப்பு நமக்கு வந்தது. அதன்கண் ஒரு பக்கம் ஆங்கிலமும் மற்ருெரு பக்கம் ஹிந்தியும் பொலிவதைக் கண்டேம்; 'தமிழும் ஹிந்தியும் ஏன் அவ்வழைப்புத் தாளில் திகழலாகாது?' என்று எண்ணினேம். தமிழ்நாட்டில் காங்கிரஸ்காரர் இனியாவது தமிழ்மொழி வளர்ச்சிக்கென உழைக்க முன்வருவரோ என்று கூவி அடங்குகிறேம்."[16]

"நாட்டுப்பற்றுக்கு அடிப்படை நாட்டு மொழிப்பற்று. அம்மொழிப்பற்று, மற்றக் கலை முதலியவற்றின்மீது பற்றுண்டாக்கும். நந் தேசபக்தர்களின் மொழிப்பற்றை நேயர்கட்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. தமிழ்மக்களிடை ஒரு தமிழன் அந்நிய மொழி பேசுவது எற்றுக்கு? தாய்மொழியில் கருத்தை வெளியிட்டாலென்ன? தலைவெடித்தா போகும்? தாய்மொழிப் பற்றில்லா ஒருவன் எங்ஙனந் தேச பக்தனவன்?"[17]

பொறுப்பான பேச்சு

தமிழ்நாட்டில் தமிழையே தங்கள் தாய்மொழியாக் கொண்டிருந்தும், அதனைப் புறக்கணித்து வேறுவேறு மொழிகளையே தலைமையில் ஏற்றும் ஒரு கூட்டத்தார், நெடுக இருந்துகொண்டே வருவது வரலாற்று உண்மை. இந்த நிலையைக் கண்ட பலர் இவர்களைத் தனித்துப் பிரித்தெடுத்துத் தாக்கிவந்தார்கள். திரு. வி. க. வும், இவர்கள் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும் என்றே விரும்பினரென்ருலும், அவர்களைத் தனித்துத் தாக்காமல், அவர்கள் மனம் புண்படட்டுவிடாமல் "சுற்றி வளைத்தே" தமது கருத்தை வெளியிட்டு வந்துள்ளார். ஒரு தனிமனிதர் அல்லது ஒரு தமிழாசிரியர் என்ற நிலையில் பேசியிருந்தால், அவரே இவ்வளவு பொதுப்படப் பேசியிருப்பார் என்று சொல்ல முடியாது; ஒரு பத்திரிகையின் ஆசிரியர் என்ற நிலையிலேயே அவர் இப்படிப் பேசினர் என்பது வெளிப்படை

---

15. நவசக்தி: 21—1—1921
16. ,, 12—10—1924
17. ,, 18—4—1928

திருத்தும் பணி எப்போதும் பொதுமை நிலையிலேயே செய்யப்படுதல் வேண்டும் ஒரு குறையைப் போக்கும்போதே மற்றொரு காழ்ப்பை ஏற்படுத்தி விடுதல் ஆகாது. இதுவே பொதுநல நோக்கினராகிய பத்திரிகையாளர் கடைப்பிடிக்க வேண்டிய நெறி. அவ்வப்போது ஏற்படும் ஊடறுப்புக்களைப் பொருட்படுத்தாமல், இந்த நெறியைக் கடைப்பிடிப்பதற்கு மிகுந்த நெஞ்சுரம் வேண்டும் இந்த உரம் திரு வி. க. விடம் சற்று மிகுதியாகவே இருந்தது என்பதற்கு அவருடைய பத்திரிகையின் இதழ் ஒவ்வொன்றும் சான்று.

2

ஆங்கில ஆட்சி, ஆங்கிலக் கல்வி, ஆங்கில நாகரிகம் இவை இப்போது நமக்கெல்லாம் பழகிப் பழங்கதையாகி விட்டவை. திரு. வி. க வும் அவர் போன்ற தேசத் தொண்டர்களும் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலக் கல்வி இந்த நாட்டிலே தருக்குற்று நின்றது. அதைக் கற்றவர்கள் மற்ற வர்களைக் கொஞ்சமும் மதிக்கவில்லை. மனிதர்களை மதியாத தோடு, இந்தியாவுக்கு உரியது தமிழகத்துக்கு உரியது என்றிருந்த எல்லாவற்றையும் தாழ்வாகவும் ஒன்றுக்கும் உதவாதவைகளாகவுமே கருதிப் பழித்து வந்தார்கள். ஆதலால், அக்காலத்தில் தேசீய உணர்ச்சி என்பது ஆங்கில முறைக் கல்வியைப் பழித்து ஒதுக்குவதாகவும், பண்டிருந்து இங்கே தழைத்த நாகரிகத்தை எடுத்துப்போற்றுவதாகவும் பீரிட்டு எழுந்தது.

ஆங்கிலக் கல்வி பயில்பவர்களுக்கு இந்தியப் பழமையின் சிறப்புத் தெரியவில்லை; தெரிவிக்கப்படவில்லை. இந்து சமயத்தின் உண்மைப் பொருளையும் இந்திய நாகரிகத்தின் மேம்பாட்டையும் அறியாமல் அவர்கள் ஏதேதோ பேசி வந்தார்கள். "நாட்டை மேற்கத்திய நாகரிகமயமாக் கினால்தான் நம்மனோர்க்கு உய்தி உண்டு" என்று கருதியவர் களும் உண்டு! இதை எதிர்த்து மடக்கவேண்டியதே அக்காலத் தேசபக்தர்களின் முதல் வேலையாக இருந்தது.

"முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்,"

என்று சாடிக் கசந்தார் சுப்பிரமணியக் கவிஞர். இந்த

(சென்ற இதழின் தொடர்ச்சி)

வள்ளுவர் காட்டும் சொல்—அல்லல்

திரு. ஆ. பாலன், தமிழாசிரியர்,
உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி.

இனி இயல்பாக நடைபெறும் இல்லறத்தில் இத்தகைய அல்லல் எதுவும் இல்லை என்பதை இவ்வுலகிற்குணர்த்தும் முகத்தான் இல்லறவியல் குறட்பாக்களில் ஒன்றிலேனும் அல்லல் எனும் சொல்லினைத் தந்து இல்லற இயல்பினரை அல்லற்படுத்தாது விடுத்தார். இத்தகு நுட்பம் வள்ளுவர் வல்லவர் என்பதற்குச் சான்று கூறும். இவ்வுலகில் இல்லறத்தை இகழ்ந்து கூறி, துறவறத்னை மேற்கொண்டு துணிந்து செல்ல விரும்புவாரின் பின், நிழல்போல் அல்லலும் தொடர்ந்துவரும். இல்லறவியலார்க்கு இல்லாத அல்லல் துறவற வியலாரைத் தொடர்ந்து நிற்கும். இல்லறத்தில் அல்லல் ஏற்படின் அவ்வில்லறம் நல்லறமாய்ச் செம்மையாய்ச் சிறப்பாய் அமையாது ஆதலின் அல்லல் தரும் அச்சொல்லினையே அவண் பயன்படுத்தாத வள்ளுவர்க்கு, துறவறத்தைத் தொடங்கியவுடனேயே அல்லலும் அவரைப் பின்தொடர்ந்தது. துன்ப இன்பங்களைத் துறந்து செல்லல் வேண்டும், மழித்தலும் நீட்டலும் வேண்டும், எஞ்ஞான்றும்

முன் பக்க தொடர்ச்சி :

நாட்டுச் சமயத்தோடும் வரலாற்றேடும் ஒட்டாத கல்வியால் மக்கள் பேடிகளாகிறுர்கள் என்று பாரதி மட்டுமல்ல, அக்காலத் தேசிய வீரர் பலருமே கருதினர்கள்.

மூன்று கோணம்

எனவே 19ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் நாட்டுப்பணி புரிய முன்வந்த அனைவரும், அவர்கள் எத்துறையில் பணி செய்தாலும், நாட்டின் இறந்த காலம் நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் ஒருங்கே படம்பிடித்துக் காட்டிவந்தார்கள். திரு. வி. க. அக்காலத்தில் எழுதிவந்த தலையங்கங்கள் கட்டுரைகள் முதலியவற்றில் இந்தப் போக்கே முனைப்புற்று நிற்கிறது. அரசியல், சமயம், சமுதாயம், கல்வி முதலிய எந்தப்பொருளைப் பற்றி எழுதினலும், அதை மூன்று நிலைகளிலும் ஆராய்கிறுர் திரு. வி. க.

(தொடரும்)

பிறர்பழிப்பதில்லாதிருத்தல் வேண்டும். சிறியார் பெரியார், நண்பர் பகைவர் என்ற பாகுபாடின்றி யாவரிடத்தும் ஒரே தன்மைத்தான அன்பினை மேற்கொள்ளும் அருளுள்ளம் வேண்டும். இவ்வாறின்றி வேறுபாடு தோன்றுமாயின் அப்போதே அல்லல் அவரைத் தொடர்ந்து துறவு நிலைக்கு ஏற்றவரல்ல இவர் சிற்றினத்தார் என்பதை பறை சாற்றும். எவரிடத்தும் அன்புகொண்டொழுகும் அருள் உள்ளமே துறவு நிலை மேற்கொள்வார்க்கு முதற்கண் வேண்டப்படுவது. அந்நெறியினை மேற்கொண்டொழுகுவார்க்குத் துறவு நிலையில் அல்லல் இல்லைஎன்பார். "அல்லல் அருளாள்வார்க்கில்லை" (உசரு) என்றார்.

இங்ஙன் பல்லாற்றானும் அல்லல் நீக்கி வாழ வகை கூறிய வள்ளுவர், ஊழ்வினைப் பயனால் நல்லார்க்கும் பொல்லார்க்கும் அல்லல் ஏற்படுவதை அறியாதிரார். ஆதலின் ஊழ்வினைப் பயனால் விளையும் அல்லலையும் ஒளியாது உரைத்தார். தம்முடைய முழு முயற்சியால் ஒன்றைச் செய்தாலும் அதனைத் தடுத்து நிறுத்த முந்தும் தன்மையுடைய ஊழினைவெல்லல் அரிது. ஆயினும் வந்துசேரும் அல்லலை நினைந்து நொந்து நைந்து வருந்தாமல் தாழ்வின்றி முயலல் வேண்டும். இவ்வாறு முயற்சி செய்வதால் பயன் விளையும் இன்பம் வந்தபோது அவ்வின்பத்தில் மூழ்கித் திளைத்து விளையாடும் இயல்புடையார். துன்புற்றக் காலத்தும் அத்துன்பத்தில் மூழ்கித் திளைத்து விளையாடாது அல்லலுற்று வருந்தி நிற்பதில் பயனில்லை. இன்பம் வந்துழி மகிழ்வடைதலும், துன்பம் வந்துழி துன்புற்றலைதலும் ஊழின் பயனே என்பார்.

"நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்" (ருஎகூ) எனச் செப்பினார்.

வள்ளுவர் காட்டும் அல்லல் எனும் சொல் தந்து நின்ற பொருளமைந்த விளக்கங்களைக் கண்டோம். மேலும் "அரிதாற்றி அல்லலோய் நீக்கி"—என்பதையும், "அலந்தாரை அல்லலோய் செய்தற்றால்" — என்றியம்புவதையும், "அவருறும் —அல்லலோய் காண்கம் சிறிது"—எனச் செப்புவதையும் கற்றுணர்தல் அல்லல் நீக்கி இன்பங் காட்டும் வள்ளுவர்க்கு ஏற்றம் தரும் செயலாகஅமையும். வள்ளுவர் காட்டும் சொற்களில் காணப்படும்பொருளாழத்தையும் உலகஇயல்பிற்கு ஏற்றவாறு அவை பயன்படும் செயலையும் வள்ளுவத்தை ஊன்றியுணர்வார்க்கேப் பெரிதும் புலப்படும் என்பர் ஆன்றோர்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஈரத்தின் சுவடு

திரு. இரா. குழந்தைவேலு, எம்.ஏ.

காட்சி: 3

களம்: சோழன் அரண்மனை.

காலம்: மாலை.

கூற்று: கரிகாற்பெருவளத்தான், முடத்தாமக்கண்ணியார், ஆதிமந்தி, ஆட்டனத்தி. வாயிற்காவலன்.

வாயிற்காவலன்: வாழ்க, வேந்தே! வாழ்க தங்கள் அழைப்பை ஏற்ற புலவர் பெருமாட்டியார் முடத்தாமக் கண்ணியார் அரசவாயிலை அடைந்தனர்.

கரிகாற்பெருவளத்தான்: எதிர்கொள்வதற்கு வந்தேன்! தொடியில் விரைந்து புலமைச் செல்வியார்க்கு அறிவி.

வாயிற்காவலன்: அரசே! அங்ஙனமே அறிவிக்கின்றேன். (விரைந்து நடந்து) தாயே! வேந்தர் எதிர்கொள்வதற்கு வருதலைத் தங்கள் திருமுன்பு அறிவித்து மகிழ்கின்றேன்.

முடத்தாமக்கண்ணியார்: சிறக்க, நின்பணி.

க. பெ. வளத்தான்: புலவர் பெருமாட்டியாரே! என் அன்பு கனிந்த வணக்கம். வருக! தங்கள் வருகைக்குக் காத்திருந்தேன். தங்கள் வருகையால் என் மனைக்கே பெருமை.

மு. தா. கண்ணியார்: வளவ! என் வருகை கண்டு நின் மனம் குளிர்ந்து கழிபேருவகை கொண்ட பெருமைக்கு உழுவலன்பு பெரிதுடையேன் மன்னவ, நின் ஆட்சியில் பல்வளமும் நிறைந்து பொலிதற்கு எல்லாம் வல்ல இறைவனை அருள்சுரந்தருளுமாறு இறைஞ்சுகின்றேன்.

க. பெ. வளத்தான்: வாயிலில் நிறுத்திப் பேசினேன். மன்னித்தருள்வீராக. தாங்கள் மனையகத்து எழுந்தருளுதல் வேண்டும்.

(அரண்மனையகத்து நடந்தவாறே உரையாடல்)

மு. தா. கண்ணியார்: வேந்தே! நுமக்கு எம்பால் எத்துணைக் கனிவு. நல்ல தமிழை மதித்த நின் நெஞ்சம் வாழ்க. என்

கண்பார்க்கப் பிறந்து வளர்ந்த செல்வி நின் மகள். நின் மகள் திருமணங்கொண்ட நாளில் வரவிழைந்தேன். உடல் நலக்கேடு என்னை ஒடுக்கியது. மணவிழா நாளில் எங்கும் முழவு முழக்கம்; எங்கும் யாழ் இசைப் பெருக்கம்; மக்கள் களியாட்டம்; அனைத்தும் நுகர்ந்தேன்; உவப்புற்றேன். மணமக்கள் தம் இல்வாழ்வில் பல்வளமும் தழைத்துப் பெருகி மலிக. அவர்கள் நீடுவாழ்க

க. பெ. வளத்தான் : (முகம் மலர்ந்து) தங்களை இருக்கையில் இருக்கவேண்டுவன் (புலமைச் செல்வியார் முன்னர் அமரவே, தொடர்ந்து மன்னனும் அமர்ந்து) புலமைச் செல்வியார் தம் வாழ்த்தைப் பெற்ற மன்றலஞ் செல்வர்களின் வாழ்நாள் நெடிது தழைக்கவேண்டும்.

மூ. தா. கண்ணியார் : ஆதிமந்தியையும் ஆட்டனத்தியையும் காண அவாவினேன்.

க. பெ வளத்தான் : பெருமாட்டியாரே! யானும் அவர்களைக் கண்டு உரை நிகழ்த்தல் இந்நாளில் அரிதாயிற்று. மள்ளர் விழா நிகழுங் களமும் மகளிர் துணங்கையாடும் அரங்கமும். நாளும் அவர்கள் கண்ணிற்கு விருந்தூட்டுகின்றன. எந்நாளும் இருவரும் அங்கெல்லாம் சென்று —விடுதலைக் காண்கின்றேன்

மூ. தா. கண்ணியார் : எத்துணைப் பொருத்தம்! தன் கொழுநனைக் கவர்ந்த கலைகளே ஆதிமந்தியின் நெஞ்சத்தையும் பிணித்திருக்கும் சிறப்பே சிறப்பு!

க. பெ. வளத்தான் : முற்றும் உண்மை.
புலமையாட்டியாரே! ஆட்டனத்தியார் கலைத்திறனைக் கண்டுகளிக்கும் இனிய வாய்ப்புக்கள் ஆதிமந்திக்கு வாய்த்தன. ஆட்டனத்தியாரிடத்துத் தனிப்பெருங்காதல் கொண்டாள் இருவர் உள்ளப் புணர்ப்பும் அறிந்தேன். பருவத் தகுதியையும் ஆய்ந்தேன்; தெளிந்தேன். உவப்புற்று இருவரையும் இல்லறத் தலைவர்களாக்கிக் காதலை வாழவைத்தேன்.

மூ. தா. கண்ணியார்: நின்னறம் பலரும் பின்பற்றற்பாலது. கசடறக் கற்ற அகத்திணைக் காதலைக் கற்றபின் கற்றபடி, செயலால் கற்பாய்க் காத்த, நின் தெளிந்த தனி அறிவு பாராட்டுதற்குரியது. காதலாற் பிணிப்புண்ட இருவர்

பருவச் செவ்வியும் நெஞ்சக்கலப்பும் தெளிந்த அடிப்படை யொன்றாலே தன்னிகரில்லாப் புகழ்கொண்டாய். வழிவழி சிறக்க நின் நெஞ்சம்!

க. பெ வளத்தான்: புலவாட்டியாரே! தங்கள் விழைவிற் கேற்ப இல்லற மக்கள் இருவரும் வருகின்றார்கள்.

மு. தா. கண்ணியார்: (உவந்து) களிறும் பிடியும் கலந்து வருதலைப்போலக் காதல் மகனும் மகளும் வரும் காட்சியினைக் கண்குளிர்ப்பக் காணும் நல்வாய்ப்பு வாய்க்கின்றது.

ஆட்டனத்தி: மாண்புறு புலமைச் செல்வியாரே! என் வணக்கம்.

ஆதிமந்தி: புலமைத்தாயே! வணக்கம் தங்களைக் காணும் பேறு பெரிது. இனிது மகிழ்கின்றேன்.

மு. தா. கண்ணியார்: நீவிர் வழிபடுதெய்வம் புறங்காப்ப, மணவிழாச் செல்வர்களே! வாழ்க பல்லாண்டு!

காட்சி: 4

களம்: மருதி மனை.

காலம்: காலை.

கூற்று: மருதி, வெள்ளிவீதி.

மருதி: உன்னை நினைந்தே எழுந்து புறப்பட்டேன்.

வெள்ளிவீதி: யானும் உன்னைக் காணவே வந்தேன். தோழி, ஏன் இப்படி உடலொளி குன்றியிருக்கின்றாய்? இத்துணை நாளும் நின் கூந்தல் நெய் மறந்தது இல்லையே! இன்று நின் கூந்தல் நெய் துறந்தது ஏன்? நின் கண்ணில் பொலிவு இல்லையே!

மருதி: எனக்கு அவரே உயிர் (அழுகிறாள்)

வெள்ளிவீதி: மருதி, கலக்கம் ஏன்? எதனை நினைந்து கலங்கி அழுகின்றாய்?

மருதி: (நெஞ்சம் நைந்து விம்மி) வெள்ளிவீதி, அவர் ஆதிமந்தியை மணந்த செய்தி நாடறிந்தது. பின்னரும் (அழுகிறாள்)

(தொடரும்)

தமிழ்மொழி வளர உலகத்துடன் இணைந்துபோக வேண்டும். புதுப்புதுச் சொற்கள், கருத்துக்கள் இவைகளை ஏற்று தன்வயப்படுத்திக் கொள்ளவேண்டும். கணிதம், பௌதிகம், ரசாயனம் போன்ற விஞ்ஞானங்களைப்பற்றிய நூல்கள் தமிழில் தோன்ற வேண்டும் தமிழாசிரியர், பௌதிக ஆசிரியர் அல்லது ரசாயன ஆசிரியர் இவர்கள் ஏற்றவாறு சேர்ந்து விஞ்ஞான நூற்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

புதிய மொழி பெயர்ப்புகள் போதா. வெறும் மொழி பெயர்ப்பென்றளவில் Screw Driver என்ற சொற்களை திருகாணியைத் திருகும் ஆணி என்று மொழி பெயர்க்கப்பெறும். நம் நாட்டுப்புறங்களில் "திருப்புளி" என்று மிகப் பொருத்தமான சொல் வழங்குகிறது. ஜோடி மாடென்கிறோம். அதை முன்னோர்கள் ஒரிணை மாடு என்றனர்கள். இவ்வாறான இன்று வரை வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களையெல்லாம் திரட்டி சொல்லகராதிகள் வெளியிடவேண்டும். உழவுத்துறை, தச்சுத்துறை, இசைத்துறை ஆகிய பலதுறைகளிலும் இத்தகைய சொல்லகராதிகள் வரவேண்டும்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ்ப்பாட புத்தகங்களை அந்தந்த வகுப்பு நிலைகளுக்கேற்றவாறு அமைக்க வேண்டும். ஒரு மாணவன் பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு அல்லது கல்லூரி இவைகளில் ஒரே நூலின் ஒரு பகுதியையோ அல்லது படலத்தையோ படித்துவருவதைக் காண்கிறோம். அந்த வகுப்புகளுக்குத் தகுந்தவாறு படிப்படியாக இலக்கிய அறிவை வளர்க்கவேண்டும்.

பொதுவாகக் கூறுமிடத்து தமிழ் வளர்ச்சி மெதுவாக ஊர்கிறது. இப்போது துடிப்பாக செயற்படவேண்டும். தனியாக ஒவ்வொருவர் தமிழ்ப்பணி மட்டும் செய்வது பயனளிக்காது மக்கள் எல்லோரும் தமிழ் வளர்ச்சிக்கு இன்னின்னவை செய்யவேண்டுமென்பதை அரசினரிடம் வற்புறுத்தித் தூண்டிக்கொண்டே இருத்தல்வேண்டும். தேவையாயின் இடித்துரைக்கவும் வேண்டும். இப்போது தமிழ் ஒலிக்கிறது, ஆனால் தமிழ்க்காற்று வீசவேண்டும். முன்கூறிய வழிகளில் தமிழை வளம்பெறச் செய்தால்தான் தமிழ் வளரும்.

தலைவர் முடிவுரை. தென்னவன் தீதிலன் என்பது பற்றி திருமதி சாலினி இளந்திரையன் கூறிய கருத்துக்கள் பொருத்தமாகவே இருந்தன. இளங்கோவடிகள் 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்" என்னும் கருத்தினை ஆங்காங்கு எடுத்துக்காட்டியே செல்கிறார். கண்ணகி பழம் பிறப்பினை உணர்ந்த பின்னரே தெய்வ வடிவில் தென்னவன் தீதிலன் என்று வாழ்த்தினள் என்பதும் நினைவுகொள்ளத் தக்கதாகும்.

தமிழ் வளர்ச்சிக்கு ஒரு திட்டமாக பேராசிரியர் சாலை இளந்திரையன் கூறிய கருத்துக்கள் மிகவும் வேண்டற்பாலதாகும். அரசியலாரின் வழியே வெளிவரத் தொடங்கியுள்ள பாட புத்தகங்கள் அறிவுப் பெருக்கத்திற்கும், மொழி வளர்ச்சிக்கும் ஈடு செய்வதாக மேலும் சிறப்புற அமைதல் வேண்டும். குறைகள் அமைதல் இயல்பாயினும் அதனைக் களைந்து தூயத் தமிழ்ப்பாட நூல்கள் வெளிவருதல் இன்றியமையாததாகும். தமிழ்நாட்டு மக்களும் கல்வித்துறையாளர்களும் இணைந்து தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபடுவார்களாயின் தமிழ் நன்கு விரைந்து வளர்ச்சியுற்று, மொழித்திறத்தில் உலகில் முதன்மையுடன் விளங்கும், உலகத்தில் மற்ற நாடுகளில் பல துறைகளிலும் முன்னேற்றம் மிக வேகமாகப் பறந்து செல்கிறது. தமிழில் முன்னேற்றம் மெதுவாக நகர்கிறது. இது மாறவேண்டும் மிக விரைவான வளர்ச்சிக்கான பணிகளில் தமிழ்மக்களும். பல்கலைக் கழகங்களும் அரசினரும் ஈடுபடல் வேண்டும்.

சொல் — விளக்கம்

நாக்கு:—

நாக்கு என்னுஞ் சொல், தெலுங்கில் நால்க என்றும், கன்னடத்தில் நாலகெ என்றும் உளது. இவ்விரண்டு மொழிகளிலும் நால் எனும் பகுதி காணுதலானும், தமிழில் நாற்கு என்பது மருவி நாக்கு என்றாதல் கூடுமாகலானும் (நற்கீரர் என்பது நக்கீரர் என மருவியது ஈண்டு நினைக்கத்தகும்) நாக்கு என்பது நால் என்பது அடியாகப் பிறந்தது எனவும், நால்வது என்னும் பொருளுடையதாகலாம் எனவும் தோன்றுகின்றது. நால்வது அசைவது, நக்குவது நாக்கு என்று கால்ட்வெல் பாதிரியார் கூறினது அமைவுடையதெனத் தோன்றவில்லை.

(வே. வேங்கடராசலு ரெட்டியார்)–பொழில் துணர்-10 பக். 178